# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# எசேக்கியேல்:
# தரிசனங்களின் மனிதன்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Lazarus

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

நீண்ட நாட்களுக்கு முன், வலிமை வாய்ந்த படையொன்று யூதாவை தாக்கியதின் விளைவாக, அநேக தேவனுடைய ஜனங்கள் பாபிலோனுக்கு சிறைப்பிடித்து செல்லப்பட்டார்கள், ...



... தங்களுடைய சொந்த இடத்திலிருந்து தூரமாய், அந்த யூதர்கள் கேபார் நதியண்டையிலே வசித்து வந்தார்கள்.



அவர்களுடைய மத்தியில் இருந்த தேவனுடைய ஊழியக்காரன் தான், தீர்க்கதரிசி எசேக்கியேல்.



ஒருநாள், எசேக்கியேலுக்கு தேவன் ஒரு தரிசனத்தை கொடுத்தார். தேவனுடைய மகிமையானது பிரகாசமான வெளிச்சமாக, நான்கு அக்கினிமயமான ஜீவன்கள் வடிவில் தோன்றின. அவைகள் ஒவ்வொன்றிற்க்கும் நான்கு முகங்களும் மற்றும் நான்கு செட்டைகளும் காணப்பட்டன.



அவைகளுக்கு மேலாக ஒரு அழகான நீலக்கல் சிம்மாசனம், வானவில் போல் பிரகாசிக்கிற வெளிச்சத்தினால் நிறைந்திருந்தது. எசேக்கியேல் அவைகளைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்தான்.



தேவன் எசேக்கியேலோடு பேசினார். "நான் உன்னை இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கு அனுப்புகிறேன். என்னுடைய வார்த்தைகளை அவர்களோடு பேசு, ஏனெனில் அவர்கள் கலகக்காரர்கள்." ஒரு புத்தகச் சுருளை கொண்ட, கை ஒன்று தெரிந்தது.



"இந்த புத்தகச் சுருளை புசி," தேவன் சொன்னார், "பின்பு போ, இஸ்ரவேல் வீட்டாருடன் பேசு."  எவ்வளவு வித்தியாசமான கட்டளை!  ஆனால் எசேக்கியேல் கீழ்ப்படிந்தான், புத்தகச் சுருளை சாப்பிட்டுவிட்டு சென்றான்.



தேவனுடைய
ஆவியானவர்
எசேக்கியேலை
உயர்த்தி கேபார்
நதியண்டையின்
மற்றொரு பாகத்தில்
வாழ்கிற சிறையிருப்பு
யூதர்களிடம் அவனை
தூக்கி சென்று விட்டார்.



ஏழு நாட்கள் அவர்கள்
உட்கார்ந்திருந்த
இடத்தில்
இவனும் உட்கார்ந்து,
தான் கண்ட
காரியங்களைக் குறித்து
திகைப்படைந்திருந்தான்.



பின்பு தேவன் எசேக்கியேலை ஒரு காவலாளனாக மாற்றினார். அவன் துன்மார்க்கம் செய்கிற ஜனங்களை எச்சரித்து தேவனுக்கு கீழ்ப்படியச் சொன்னான்.






தேவனுடைய வார்த்தையை ஜனங்கள் புரிந்துக்கொள்ள எசேக்கியேல் பல விசித்தரமான காரியங்களைச் செய்தான். ஒரு செங்கலில் எருசலேமின் நகரத்தின் படத்தை வரைந்து வைத்தான். அவன் எருசலேமை சுற்றி வலிமையான ஒரு படையை வரைந்தபோது ஜனங்கள் அவன் என்ன வரைகிறான் என்று எட்டிப்பார்த்திருக்கலாம். தேவனுடைய பரிசுத்த நகரம் வெகுவிரைவிலே அழிக்கப்பட்டு போகும் என்று அவன் காட்டினான்.

இஸ்ரவேல், வட ராஜ்யம், 390 வருடங்கள்
தேவனுக்கு கீழ்ப்படியாமற்போயிற்று, இப்போது யூதா, தென் இராஜ்ஜியம், 40 வருடங்கள். அதினாலே தான் இஸ்ரவேல் அழிக்கப்பட்டுபோயிற்று மற்றும் அதினால் யூதா சீக்கிரமாக விழப்போகிறது.



ஜனங்களுடைய பாவத்தின் வருடங்களை நினைப்பூட்டும் வண்ணமாக, தேவன் எசேக்கியேலை 390 நாட்கள் வலது புறமாக படுக்கவும், பின்பு நாற்பது நாட்கள் இடது புறமாகவும் படுக்கச் சொன்னார்.





ஒருவேளை மக்கள் எசேக்கியேல்
ஒரு விசித்திரமான மனிதன் என்று
யோசிக்க ஆரம்பித்திருக்கலாம்.
அவன் தேவன் சொல்லிய எல்லாக்
காரியங்களையும் செய்தான்.
ஒருநாள், அவன் தன் முடியை
சவரம் பண்ணி, அதில் மூன்றில்
ஒரு பகுதியை எரித்துப்போட்டான்.





பாபிலோன் படையானது
எருசலேம் பட்டணத்தை
தாக்கும் போது மூன்றில் ஒரு
பகுதியினர் வியாதியினாலும்,
பஞ்சத்தினாலும் மடிந்து
போவார்கள் என்று காண்பிக்க
இப்படிச் செய்தான்.



மற்றும் மூன்றில் ஒரு பங்கு முடியை எடுத்து, பட்டயத்தால் வெட்டிப்போட்டான். எதிராளிகளின் பட்டயத்தினால் அடுத்த மூன்றின் ஒரு பகுதியினர் சாவார்கள் என்று காண்பிக்க இவ்வாறு செய்தான். கடைசி பாகத்தை, எசேக்கியேல் காற்றில் தூற்றிப்போட்டான்.



ஆனால் ஒரு சில முடியை தன் வஸ்திரத்தின் விளிம்பில் வைத்து தைத்துக் கொண்டான். அதன் அடையாளம் என்னவெனில் தேவன் சில ஜனங்களை காப்பாற்றி அவர்களை மறுபடியும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு எடுத்துச் செல்வார்.



வருகிற நாட்களில் காரியங்கள் மோசமாக மாறும், அவர்கள் எதிர்பார்த்தது போல் சீராவதில்லை என்று தைரியமாக தீர்க்கதரிசி சிறையிருப்பிலிருந்த யூதர்களுக்கு சொன்னான். ஜனங்கள் எசேக்கியேலிடத்தில் கோபப்பட்டார்கள், ஆனால் அவன் தேவனுடைய வார்த்தையை சொல்லிக் கொண்டேயிருந்தான்.



ஒருநாள், இஸ்ரவேலின் மூப்பர்களுடன் அவன் அமர்ந்திருக்கையில் எசேக்கியேலுக்கு தேவன் ஒரு தரிசனத்தைக் கொடுத்தார். அந்த தரிசனத்திலே, தேவன் அவனுடைய முடியை பிடித்து தூக்கி மற்றும் எருசலேம் தேவாலயத்துக்கு அழைத்துச் சென்றார்.



தேவாலயத்திலே, ஊரும் பிராணிகளையும், அசுத்தமான மிருகங்களையும், விக்கிரகங்களையும் தேவன் எசேக்கியேலுக்கு காண்பித்தார். இப்படிப்பட்டவைகள் தேவனுடைய ஆலயத்திலே ஒருபோதும் காணப்படவே கூடாது.



அங்குள்ள தலைவர்கள் தேவனுக்கு பதிலாக இவைகளை வணங்கினார்கள். தேவனுடைய மகிமை ஆலயத்தை விட்டு விலகுவதையும், அது அழிக்கப்படுமென்றும் தேவன் எசேக்கியேலுக்கு காண்பித்தார். தரிசனம் முடிந்த போது, எசேக்கியேல் யூதர்களுக்குச் சொன்னான்.





தேவன் சொன்ன எல்லாக் காரியங்களும் உண்மையாக நிறைவேறின. எருசலேம் அழிக்கப்பட்டது. அநேக ஜனங்கள் மடிந்து போனார்கள். பாபிலோனில் சிறையிருப்பிலே இருந்த யூதர்கள் இவைகளை கேள்விப்பட்ட போது, தேவன் தன்னுடைய ஜனங்களை முழுவதுமாக என்றென்றைக்கும் விட்டுவிட்டாரோ என்று எண்ண ஆரம்பித்தார்கள்.

ஆனால் தன்னுடைய தீர்க்கதரிசிக்கு
வேறொரு செய்தியைக் கொடுத்தார்.



தேவன் எசேக்கியேலை உலர்ந்த மனித எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்குக்கு அழைத்துச் சென்றார்.



"மனுஷ குமாரனே, இந்த எலும்புகள் வாழக்கூடுமா?" தேவன் எசேக்கியேலிடத்தில் கேட்டார். "ஓ ஆண்டவராகிய தேவனே, உமக்குத் தெரியும்," என்று எசேக்கியேல் பதிலளித்தான். நிச்சயமாக உலர்ந்த எலும்புகளால் மறுபடியும் வாழ முடியாது.



ஆண்டவர் சொன்னார், "அந்த உலர்ந்த எலும்புகளுக்கு தீர்க்கதரிசனம் சொல்லு, மற்றும் சொல், 'ஓ' உலர்ந்த எலும்புகளே, நீங்கள் தேவனுடைய வார்த்தையைக் கேளுங்கள்! அப்போது உயிர்பெறுவீர்கள்." அவன் அதற்கு கீழ்ப்படிந்த போது, எசேக்கியேல் ஆரவார சத்தத்தை கேட்டான். அது எதினாலே நடை பெற்றிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?



தீர்க்கதரிசி திகைப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஒவ்வொரு எலும்பும் சரீரத்தோடு சேர்ந்தது.



பின்பு, சதை அவைகள் மேல் வந்தன.



மற்றும் தோலானது அவைகளை மூடி மறைத்தன, ஆனாலும் அவைகளுக்குள் சுவாசம் இல்லாதிருந்தது.



பின்பு ஆண்டவர் சொன்னார், "தீர்க்கதரிசனம் உரை, மனுஷகுமாரனே சொல் 'சுவாசமே நான்கு முனையிலிருந்தும் காற்றுகளே வாருங்கள். அவைகள் ஜீவிக்கும்படியாக சுவாசத்தை அதின்மேல் ஊதுங்கள்.'"



எசேக்கியேல் அதை செய்தபோது, அவைகளுக்குள்ளாக சுவாசம் வந்தது.  அவைகள் உயிர் பெற்றன, மற்றும் காலூன்றி தங்கள் கால்களில் நின்றன.  அப்போது ஒரு பெரிய படை பள்ளத்தாக்கை நிரப்பிற்று.



எருசலேம் விழுந்தபோது பாபிலோனிலுள்ள யூதர்கள் நம்பிக்கையற்றுப் போனார்கள் என்று தேவனுக்குத் தெரியும். எசேக்கியேலின் தரிசனத்தின் மூலமாக தேவன் செய்தியை அனுப்பினார்.



தேவன் சொன்னார், "இந்த உலர்ந்த எலும்புகளெல்லாம் இஸ்ரவேல் வீட்டாரே. நான் என்னுடைய ஆவியை உங்களுக்குள்ளே போடுவேன், மற்றும் உங்களை தேசத்தில் நிலை நாட்டுவேன்."



தேவனிடத்திலிருந்து வந்த எவ்வளவு பெரிய நம்பிக்கையின் செய்தி! தேவன் எசேக்கியேலுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் பின்னால் யூதர்கள் தங்களுடைய சொந்த தேசத்திற்கு குடியேற திரும்பி வந்த போது உண்மையாக நிறைவேறியது.



தேவன் திரும்ப தங்களுடைய வீடுகளுக்கு அழைத்து வந்திருக்கிறார் என்று அவர்களுக்குத் தெரியும். தேவனுடைய வார்த்தை எப்போதும் உண்மையாகவே நிறைவேறும்.



எசேக்கியேல்: தரிசனங்களின் மனிதன்

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

## காணப்படுமிடம்

எசேக்கியேல்

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16